மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 28/2018

பெயர் – நாராயணசாமி (வா.சா.1)

நாள் – 23.08.2023

9 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

தபசில் சொத்தாக காண்பிக்கப்பட்ட 8 அயிட்ட சொத்தும் எனது தகப்பனார் பெருமாள் செட்டியார் எனது தாயார் சுப்பம்மாள் ஆகியோர்கள் தனிதனியாக கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர்கள் என்றால் என்னையும் சேர்த்து 7 பேர்கள். பெருமாள் ராஜ், ராமசாமி, பாண்டியன் (எ) பழனிச்சாமி, லட்சுமணப்பெருமாள், நாராயணசாமி (வாதி) , சீனியம்மாள், சரஸ்வதி ஆகியோர்கள் வாரிசு ஆவார்கள். இதில் யாரெல்லாம் இறந்து போய்விட்டார்கள் என்றால் லட்சுமணப்பெருமாள், சரஸ்வதி, பாண்டியன் (எ) பழனிச்சாமி ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள். லட்சுமணப்பெருமாளுக்கு யாரெல்லாம் வாரிசுகள் என்றால் சுப்பம்மாள் (மனைவி), சீனிவாசன் (மகன்), ராஜம்மாள் (மகள்), விஜயலட்சுமி (மகள்) ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள். இந்த வழக்கில் நான் ராஜம்மாள் மற்றும் விஜயலட்சுமி ஆகியோர்களை கட்சியாக சேர்க்கவில்லை என்றால் விஜயலட்சுமியை கட்சியாக சேர்த்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் சீர்திருத்த பிராதில் விஜயலட்சுமி கட்சியாக சேர்க்கவில்லை என்றால் விஜயலட்சுமியின் பெயர் ராஜலட்சுமி ஆகும். ராஜலட்சுமி என்று அவரை கட்சியாக சேர்த்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.6 ஆவணமான பாகப்பிரிவினை ஆவணத்தில் பெருமாள் செட்டியாரின் வாரிசுகள் என்று தனியாக பாகம் எதுவும் வா.சா.ஆ.6 ஆவணத்தில் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் 1984 ம் ஆண்டு என் தகப்பனார் உயிரோடு இருக்கும் போது அவரது வாரிசுகளான எங்களுக்கு அரசு நிலஉடமை திட்டத்தின் கீழ் பட்டாமாறுதல் செய்து கொடுத்தார். அதன் பேரில் அவரவர்களுக்கு வருவாய்துறையினாரால் பட்டா வழங்கப்பட்டுள்ளது. 1984 ம் ஆண்டு எனது

தகப்பனாரின் வாரிசுகள் அனைவருக்கும் பட்டா பெற்றுக் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. வா.சா.ஆ.6 ஆவணத்தில் 3ம் பாரா 2வது வரியில் இரண்டு பேருக்கு கூட்டு பட்டாவாக இருப்பதால் மற்றும் பெருமாள்ராஜ் என்று எழுதி அதன் மீது ஒயிட்னர் போட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு பேருக்கும் கூட்டு பட்டாவாக இருப்பதால் என்று குறிப்பிட்டுள்ளது. 3வது வரியில் பெருமாள்ராஜ் என்று எழுதி ஒயிட்னர் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3வது வரியில் உள்ள 2 ஏக்கர் 34 சென்ட் என்று அடித்தலோடு எழுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2 ஏக்கர் 34 சென்ட் என்று அடித்தலோடு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 4வது வரியில் பாண்டியன் (எ) பழனிச்சாமி என்று ஒயிட்னர் போட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 க்கான முத்திரைத்தாள் யார் வாங்கினார் என்றால் பாண்டியன் (எ) பழனிச்சாமி வாங்கினார். அவர் பெருமாள்செட்டியாரின் வாரிசுகளில் ஒருவர் ஆவார். வா.சா.ஆ.6 ஆவணங்கள் 3 தாள்களில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக ஒரு ஆவணத்தில் முத்திரைத்தாளில் உள்ள முதல் பக்கத்தில் மட்டுமே சரத்துக்கள் எழுதப்படும் என்றாலும் அதன்பின்பக்கத்தில் எதுவும் எழுதப்படாது என்றால் சரியல்ல. ஒரு ஆவணத்தில் உள்ள முதல் பக்கத்தில் முதல் தாளில் உள்ள முதல் பக்கத்தில் எழுதுவது வழக்கம் என்றாலும் பின்பக்கத்தில் வழக்கம் கிடையாது என்றாலும் அந்த விவரத்தை தெரிந்துகொண்டே வேண்டுமென்றே சரியல்ல என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணமான பாக பிரிவினை பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள முதல் தாள் மற்றும் 3வது தாள்கள் முத்திரை தாள்களாகவும், நடுவில் உள்ள ஒரு பக்கத்தில் சாதாரண தாளில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் 1,2 பக்கத்தில் உள்ள எழுத்துக்கள் வெவ்வேறு பேனாக்கள் கொண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள 3வது பக்கத்தில் உள்ள பாதி ஷரத்துக்கள் ஒரு பேனாவினாலும் அதில் உள்ள

மீதி ஷரத்துக்கள் வேறு ஒரு பேனாவாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள 3 வது பக்கத்தில் உள்ள பாதி ஷரத்துக்களில் பாதி ஷரத்துக்கள் ஒரு மையினாலும் மீதி ஷரத்துக்ள் வேறு மையினாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள 1,4,மற்றும் 5 ம் பக்கத்தில் மட்டுமே தரப்பினர்களின் பெயர்கள் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள ஷரத்துக்களை நான் தான் எழுதினேன் என்றால் சரிதான். சாட்சிகளின் பெயரில் சொக்கலிங்கம் என்று மட்டும் தான் உள்ளது என்றாலும் அவரது தகப்பனார் பெயர் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணம் என்னால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்வதற்காக எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான். தபசில் சொத்துக்கான பட்டா எந்த ஆண்டில் என் பெயருக்கு மாறியது என்றால் 1984 ம் ஆண்டு மாறியுள்ளது. வா.சா.ஆ.6 ஆவணம் 1994 ம் ஆண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணம் எழுதுவதற்கு முன்பாகவே என் பெயரிட்டு பட்டா மாறியுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு என் பெயருக்கு பட்டா மாற்றியுள்ளது மோசடியானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணமான நாழிதழுக்கான முழு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் கொடுத்த விளம்பரம் மட்டும் அதில் உள்ளது. வா.சா.ஆ.8 ஆவணத்தில் உள்ள விளம்பரம் யார் கொடுத்தது என்றால் என்னுடன் பிறந்தவர்கள் எல்லோரும் சேர்ந்து வழக்கறிஞர் மூலமாக நாளிதழில் விளம்பரம் செய்தோம். வா.சா.ஆ.8 ஆவணத்தில் எனது தகப்பனாரான பெருமாள் செட்டியால் மனநிலை சரியில்லாமல் இருந்ததாக உள்ளது என்றால் சரிதான். ஏனென்றால் எனது தகப்பனாரிடம் இருந்து மற்ற நபர்கள் சொத்துக்களை அபகரிக்க கூடாது மற்றும் வில்லங்கம் எதுவும் செய்யக்கூடாது என்பதற்காக அவ்வாறு கொடுக்கப்பட்டது ஆகும். எனது தகப்பனார் சுமார் 10 ஆண்டுகாலமாக மனநிலை சரியில்லாமல் இருந்திருப்பாரா என்றால் 6 மாத காலமாக மனநிலை சரியில்லாமல்

இருந்திருப்பார். எனது தகப்பனார் மனநிலை சரியில்லாமல் இருந்ததற்காக வைத்தியம் பார்த்தாரா என்றால் நாட்டு வைத்தியம் பார்த்தார். எனது தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் 1998 ம் ஆண்டு இறந்தார். காவல்துறையில் நான் புகார் கொடுத்தற்கான ஆவணம் தான் வா.சா.ஆ.10 ஆகும் என்றால் சரிதான். அந்த புகார் 9 முதல் 11 பிரதிவாதிகள் மீது கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் வேறு புகார் மனுவில் 9 முதல் 11 பிரதிவாதிகள் மீது தனியாக வேறு புகார் கொடுத்துள்ளேன். அந்த புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். என் பெயரில் 2018 ம் ஆண்டில் பட்டா ஏற்பட்டு அதை தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1984 ம் ஆண்டு அரசு கூட்டுபட்டாவாக வழங்கியதை 2018 ம் ஆண்டு எனக்குரிய பாகத்தை பொருத்து பட்டா தனியாக பட்டா பெற்று அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். கூட்டுப்பட்டா யார் யார் பெயரில் இருந்தது என்றால் பெருமாள்ராஜ் மற்றும் வாதி நாராயணசாமியாகிய என்பெயரில் இருந்தது. தபசில் சொத்துக்களை பொறுத்து எவ்விதமான பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை பொறுத்து நான் நீதிமன்ற முத்திரை கட்டணம் சட்டப்பிரிவு 25(d)படி முத்திரை கட்டணம் செலுத்த முடியாது என்றால் சரியல்ல. அது தட்டச்சு தவறுதலாகும். தட்டச்சு பிழையை திருத்தம் செய்யவில்லை என்றால் சரிதான். தபசில் சொத்துக்கான சொத்துமதிப்பை குறைத்து காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. தபசில் சொத்துக்கான மதிப்பு ரூ.10,00,000/-க்கு மேலாக இருக்கும் என்றால் சரியல்ல. தபசில் சொத்துக்கான மதிப்பு ரூ.10,00,000/-க்கு மேலாக இருக்கும் என்பதால் தாவா வழக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. எனது உடன்பிறந்த சகோதரிகளுக்கும் சீர் வரிசைகள் கொடுத்ததாக நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. என் பெயருக்கை பட்டா மாற்றம் ஏற்படுவதற்கு முன்பாக யார் பெயரில் பட்டா இருந்தோ அவருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி உள்ளேனா என்றால் இல்லை. ஏனெனில் அந்த சொத்துக்களை 1984 ம் ஆண்டு என் தகப்பனார் தான்

என் பெயரில் பட்டா ஏற்படுத்தி கொடுத்துள்ளார். தபசில் சொத்துக்களை தவிர எனது தாய் தகப்பனார் பெயரில் வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் என் அப்பா பெயரில் சர்வே எண்.163/2 ல் - 2 ஏக்கர் 40 சென்ட் நிலமும், என் அம்மா பெயரில் சர்வே எண்.158/7 ல் 2 ஏக்கரும் இதை தவிர எனது தகப்பனார் பெயரில் காலி மனை இடங்களும் உள்ளது. 9 முதல் 11 பிரதிவாதிகள் என் பெயரிலும் மற்ற பிரதிவாதிகள் மீதும் இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.74/2020 வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கிடை சொத்துக்கள் அ.வ.எண்.74/2020 ல் சேர்க்கவில்லை. இந்த வழக்கிடை சொத்துக்கள் என் தாய் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்றாலும் 9 ம் பிரதிவாதிக்கு 1/7 பாகமும், 10 , 11 பிரதிவாதிகளுக்கு 1/14 பாகமும் உள்ளது என்றால் சரியல்ல. எனது தாய் தகப்பனார் பெயரில் உளள் சொத்துக்களில் அவர்கள் பாகம் கேட்கலாம் எங்கள் பெயருக்கு பட்டா உள்ள சொத்துக்களில் பாகம் கோர முடியாது. தாவா சொத்துக்களை பொறுத்து எனக்கு தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் என்னால் கோரமுடியாது என்றால் சரியல்ல. எனவே எனது பிராது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பட்டா மற்றும் ரசீதுகள் இந்த வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.